DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 97/2018

Prosecution Witness 6

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வராஜ் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ. | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of May 2024.

(Accused present)

முதல் விசாரணை :

1. நான் தற்போது எஸ்.பி. வடுகபாளையத்தில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அசா 1 எனது அண்ணன் மகள் ஆவார். ஆஜர் எதிரி எங்கள் ஊரில்தான் வசிக்கிறார். 2016 ம் வருடம் அசா1 ம் ஆஜர் எதிரியும் பழகி வந்ததாக அசா 1 என்னிடம் கூறியுள்ளார். பின்னர் இது சம்மந்தமாக நானும் உறவினர்களும் எதிரியிடத்திலும் அவரது உறவினர்களிடத்திலும் சென்று பேச்சு வார்த்தை நடத்தினோம். அதற்கு எதிரி ஆடி மாதம் முடிந்ததும் அசா 1ஐ திருமணம் செய்துகொள்வதாக கூறினார்.

2. ஆடி மாதம் கழித்து நாங்கள் சென்று கேட்டபோது எதிரி அசா 1ஐ திருமணம் செய்துகொள்ள மறுத்துவிட்டார். அசா 1 தான் கர்ப்பமடைந்துள்ளதாக என்னிடம் தெரிவித்தார். எனவே இது சம்மந்தாக நாங்கள் காவல் நிலையம் சென்றோம். அசா 1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். 20.08.2016 அன்று எதிரியை போலீசார் தேடி வந்தார்கள். அப்போது நானும் பட்டியல் சாட்சி 6 ராமசாமி என்பவரும் போலீசாருடன் எதிரியை ராசக்காபாளையம், பெதப்பம்பட்டி ஆகிய இடங்களில் தேடிப்பார்த்தோம். பின்னர் நெகமம் வந்தபோது எதிரி பஸ் ஸ்டாப்பில் நின்றுகொண்டிருந்தார்.

3. நாங்கள் எதிரியை போலீசாருக்கு அடையாளம் காட்டினோம். போலீசார் எதிரியை கைது செய்தார்கள். போலீசார் விசாரித்தபோது எதிரி தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். தற்போது என்னிடம்

காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அசாஆ 3** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. அசா 1ம் எதிரியும் பழகி வந்த விபரத்தை அசா 1 என்னிடம் கூறினார் என்ற சங்கதியை போலீசார் விசாரணையில் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. 3/178, எஸ்.பி.வடுகபாளையம் என்பது எனது முகவரி ஆகும். அசா 1ன் தந்தை எனக்கு அண்ணன் முறை ஆவார். ஆடி மாதம் பேச்சு வார்த்தை நடந்த சங்கதியை போலீசாரிடம் நான் கூறவில்லை என்றால் சரியல்ல.

2. அசா 1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது அவருடன் நான் இருந்தேன். அசா 1ன் தந்தை எதிரியிடம் தனது மகளை திருமணம் செய்துகொள்ளுமாறு கேட்டார் என்றால் சரிதான். அதற்கு எதிரி மறுத்ததால் போலீசார் எதிரியை காவல் நிலையத்திலேயே உட்காரச்சொன்னார்கள் என்றால் சரிதான்.

3. புகார் கொடுத்தற்கு மறுநாள் போலீசார் எதிரியை கைது செய்தார்கள். அதன்பிறகு முதல் தகவல் அறிக்கையின் நகலை எங்களுக்கு கொடுத்தார்கள். 19.08.2016 அன்று அசா 1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். 20.08.2016 அன்று போலீசார் எதிரியை கைது செய்தார்கள்.

4. அசா 1 நிலையத்தில் புகார் கொடுத்தபோது சுமார் 10 நபர்கள் அங்கு சென்றிருந்தோம். எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மதியம் சுமார் 12.00 மணி இருக்கலாம். புகார் கொடுத்த அன்று எதிரி காவல் நிலையத்தில் இல்லை. நான் முண்ணுக்குபின் முரணாக நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. புகார் கொடுக்கப்பட்ட தினத்தில் காவல் ஆய்வாளர் எதிரிக்கு அலைபேசி மூலம் தொடர்புகொண்டு அழைத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நெகமத்தில் மொத்தம் 2 பேருந்து நிலையங்கள் உள்ளன. எதிரியை பேருந்து நிறுத்தத்தில்தான் கைது செய்தார்கள். அச்சமயம் பேருந்து நிறுத்தத்தில் சுமார் 4, 5 நபர்கள் இருந்தார்கள். மேற்படி நபர்களிடம் போலீசார் கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான்.

6. நெகமம் பேருந்து நிறுத்தத்தில் வைத்து போலீசார் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் போலீசார் எதிரியை காவல் நிலையம் வரவழைத்து கைது

சென்றார்கள் என்றால் சரியல்ல. நான் தமிழ் எழுத்துக்கூட்டி படிப்பேன். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் முழுவதும் படித்து பார்க்கவில்லை. அசா 1ன் தந்தை எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிகிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.